(முற்பகல் 9—50)

3. கவன ஈர்ப்பு

மதுரை வடகரைப் பகுதியில் உள்ள சலவைத் தொழிலாளர்கள் குடும்பங்கள் வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளது குறித்து.

திரு. சி.ஆர். கோலப்பா : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"மதுரை வைகை வடகரைப் பகுதியில் உள்ள பாரதி நகர், தத்தனேரி, செல்லூர், கைலாசபுரம், ஆழ்வார்புரம், குருவிகாரன்சாலை, வண்டியூர் போன்ற இடங்களில் 5000 சலவைத் தொழிலாளர்களின் குடும்பங்கள் வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாலும், சலவைத் தொழில் செய்வதற்காகப் பயன்படுத்தும் 400 கிணறுகள் அடியோடு நாசமாகிவிட்டதாலும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து"

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, விவரமான அறிக்கை @ அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றது.

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவரவர்களே. சலவைத் தொழிலாளர்கள் பாதுகாப்பாக இருக்க, அவர்களுக்கு மேடான இடங்களில் குடியிருப்பு வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவரவர்களே, சமீபத்திலே பெய்த பெரு மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பார்வையிடவும், நேரிலே நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், அவரோடு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், தலைமைச் செயலாளர், வருவாய்த் துறையிலே அதற்கென்று பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற ஆணையர் போன்றவர்களெல்லோரும் சென்று, நேரிலே பார்வையிட்டு, அந்த மக்களையெல்லாம் சந்தித்து, ஆறுதல் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவிகள் வழங்கிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக சலவைத் தொழிலிலே ஈடுபட்டுள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து விசாரித்து, உடனடியாக அவர்கள் சலவைத் தொழிலைச் செய்ய டோபிகானாக்கள் கட்டித் தரவும், மேலும் பல வசதி

@ 184-185 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1984 மார்ச் 14] [திரு. இராம. வீரப்பன்]

களைச் செய்து கொடுக்கவும், அவர்கள் எப்போதுமே இத்தகைய ஆபத்து களுக்கு உள்ளாகாத வகையில் ஆற்றங்கரையில் மேட்டுப் பகுதியில் அவர் களுக்கு வீடுகள் அமைத்துத் தரவும் நடவடிக்கைகள் எடுக்க மாண்புமிகு முதல்வரவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

திரு. சி. ஆர். கோலப்பா : தமிழக அரசின் சார்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதற்காக நான் சலவைத் தொழிலாளர்கள் சார்பாக என் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்— தொடர்ச்சி.

திரு. க. அருணாசலம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை 3-ஆம் தேதி இந்த அவையில் அளித்தபோது, நமக்கு 1984-85 ஆம் ஆண்டில் பற்றாக்குறையாக 167 கோடி ரூபாய் இருக்குமென்று தெரிவித்தார்கள். இந்த 167 கோடி ரூபாய் எப்படி வந்தது என்பது பற்றியும் விவரமான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1982-83 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறை 89 கோடி ரூபாயாக இருந்தபோதிலும்கூட, அது இறுதியில் நான்கு கோடியாக அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த 167 கோடி ரூபாயும் எப்படியும் சரிக் கட்டப்பட்டுவிடும் என்று நினைத்தோம். ஆனால் ஐந்தாம் தேதி ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தால், ஏற்பட்ட பேரிழப்பால் நம்முடைய பற்றாக்குறை இன்னும் அதிகமாக ஆகலாமென்று நினைக்கிறேன். இந்த இழப்புகள் எல்லாம் பொதுவாக, சாதாரணமாக நடந்ததையொட்டி, அதற்காக நம்முடைய அரசு நிவாரணம் அளிக்கிறது. ஆனால் பெரிய நகரங்களில் மட்டும் நிவாரணம் அளிக்கப்படுகிறது. நான் இம்மாதம் 11, 12 ஆம் தேதிகளில் பெரியகுளம் போயிருந்தேன். அங்குள்ள மக்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள். 20, 30 வருடங்களில் இந்த மாதிரி வெள்ளம் ஏற்பட்ட தில்லை என்று சொன்னார்கள். வராகன் மற்றும் பாம்பாற்றில் இம்மாதிரி வெள்ளம் இதற்கு முன்பு வந்ததில்லை என்று தெரிவித்தார்கள். சங்கணா பட்டி என்கிற கிராமத்தில் 100 குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டு உள்ளன. 70 வீடுகள் அடியோடு போய்விட்டன. அங்கு நிவாரண வேலைகள் எல்லாம் நல்லபடியாக நடைபெற்று வருகின்றன. வராகன் ஆற்றின் நடுவில் சுவர்கள் நின்றுகொண்டிருக்கின்றன. சுவர்கள் ஆற்றின்